# திருவெண்ணெய்நல்லூரில் ரூ.49 இலட்சத்தில் அல்லா சாமி குளம்!

## அமைச்சர் - முனைவர் க.பொன்முடி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்!


விழுப்புரம், டிச.27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி திருவெண்ணை நல்லூர் பேரூரில் அல்லாசாமி குளத்தை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விஸ்வநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம்சிவசக்திவேல், துணைத் தலைவர் ஜோதி, வார்டு கவுன்சிலர் சலிமா தாஜுதீன், செயல் அலுவலர் முரளி, முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கு.சரவணகுமார், மாவட்ட பிரதிநிதி சுரேஷ் பாபு, இலக்கிய அணி விஜயபாபு, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, கிருஷ்ணராஜ், முன்னாள் மாணவர் அணி அன்பழகன்,

இளைஞர் அணி நிர்மல் ராஜ், சுரேஷ், சதாம் உள்ளிட்ட நகர நிர்வாகிகள் சையத் நாசர், டி.கே. எஸ்.செந்தில்முருகன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கு.பாபு, சக்திவேல், அறிவழகன், ஜோதி, பரமேஸ்வரி செல்வம், கமலா கலியபெருமாள், அரங்கராஜ், ரகு, டி.பாக்யராஜ், வார்டு செயலாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

---

# கைத்தடி!





தூங்கிய தமிழரை தட்டி எழுப்பி
திராவிட ராக்கிய தந்தையின் கைத்தடி
அடிமை விலங்குகளை எல்லாம்
உடைத் தெறிந்த பெரியாரின் கைத்தடி
தலை குனிந் துழன்ற எளியோரை
தன்மானத் தோடு நிமிர்த்திய கைத்தடி
நாற் சந்தில் நின்ற நலிந்தோர்க்கு
நற் பாதை காட்டிய வழிகாட்டி
அறியாமை இருள் அடியோடு போக்கிய
அறிவாசானின் அடையாளமான கைத்தடி
ஏணியாய் நின்று ஏதிலியார் எல்லாரையும்
ஏற்றிக் காத்த பெரியாரின் கைத்தடி
எங்கள் ஆட்சி எம் தந்தை
தங்களுக்கே என்று சொன்ன அண்ணா
தலைவர் நெஞ்கில் தைத்த முள்ளை
கலைஞர் அகற்றினார் அவர் வழியில்
வைக்கத்து வெற்றி நூற்றாண்டு விழா
வைக்கத்தில் பெரியார் நினைவகமும் நூலகமும்
வையத்தாருக்கு வழங்கிய நம் முதல்வருக்கு
வைக்கம் வீரரின் கைத்தடி பரிசானது
போதும் இது போதும் இதனினும்
பெரிய பரிசேதும் இனி உண்டோ
பேசவும் இயலாது பெருமிதத்தால் பூரித்துப்
பொங்கிய மகிழ்வோடு நின்ற மாட்சி
திராவிட மாடல் எதுவென்று ஏகடிப்பேசித்
திரிந்தோர்க்கு இதுதான் அந்த ஒப்பிலா
திராவிடம் என ஓங்கி முழுங்கிய நாள்
இவர்தாம் பெரியார் என்றுணர்த்திய நாள்
இது நினைவு நாளல்ல இது எழுச்சிநாள்
புதுப் புனல் பாய்ச்சிய புரட்சி நாள்

நன்னன் குடி
**அவ்வை தமிழ்ச்செல்வன்**

---

### மயிலாடுதுறையில் ஓ.என்.ஜி.சி. பிற்படுத்தப்பட்ட ஊழியர் நல சங்கத்தின் சார்பில்

# தந்தை பெரியார் 51ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை, டிச.27-

மயிலாடுதுறை மாவட்டம் மன்னம்பந்தலில் உள்ள ஓ.என்.ஜி.சி. அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்களின் 51ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஓ.என்.ஜி.சி. பிற்படுத்தப்பட்ட ஊழியர் நல சங்கத்தின் சார்பில் ஓ.பி.சி. தொழிலாளர் நிதியில் இருந்து மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் புத்தக பை மற்றும் ஏழை மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஓ.என்.ஜி.,சி. பிற்படுத்தப்பட்ட ஊழியர் நல சங்க தலைவர் சேதுபதி தலைமைத் தாங்கினார். ஓ.என்.ஜி.சி. உதவி மேலாளர் உதய்பாஸ்வான் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஓ.என்.ஜி.,சி. பிற்படுத்தப்பட்ட ஊழியர் நல சங்க சேர்மேன் என்.சிவசங்கர் வரவேற்றார். நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு 90 மாணவ, மாணவிகளுக்கான கல்வி உதவித் தொகைக்கான காசோலை 50 மாணவ, மாணவிகளுக்கு புத்தகப் பை, தரைக் கடை வியாபாரிகள் 15 பேருக்கு பெரிய குடை, மாற்றுத்திறனாளி பெண்ணிற்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் ஆகியவற்றை வழங்கி பேசுகையில்,

மயிலாடுதுறை மாவட்டத்தில் அகில இந்திய அளவில் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களின் நல சங்கம் சார்பில் மாணவர்களுக்கு, கல்லூரியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் வழங்கும் விழா வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த மண்ணில் சமூக நீதி கருத்துகளை பகுத்தறிவு சிந்தனையை மானமும், அறிவும் மனிதர்களுக்கு அழகு என்று சொன்ன பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51 வது நினைவு நாளில் மிக சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள ஓ.என்ஜி.சி.யின் ஓ.பி.சி. நலசங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரை முன்னேடுத்து இந்த சங்கத்தை தொடங்கியதால் தான் இன்று, இந்தியா முழுவதும் சமூக நீதியின் அடிப்படையில் வெற்றி பயணமாக தொடர்ந்திருக்கிறீர்கள். தந்தை பெரியாரின் கருத்துகளை மட்டும் அல்ல இந்தியா முழுவதும் கொண்டு சேர்த்திருக்கின்ற உங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இந்த மண்ணில் சமூக நீதி கருத்துகளாக இருக்கட்டும், பல்வேறு பகுத்தறிவு சிந்தனைகள் உலகம் முழுவதும் எடுத்து சென்ற தலைவர் தான் தந்தை பெரியார் அவர்கள்.

ஊட்டிக்கு இந்திய குடியரசு தலைவர்கள் அவர்களை வரவேற்று தமிழக அரசின் சார்பில் பிரதிநிதியாக அங்கு பயணத்தை மேற்கொண்டேன். அப்போது அங்கு பணியாற்றிய உயர் அதிகாரி பிற்படுத்தப்பட்டோர் துறையைப் பற்றி பிற்படுத்தப்பட்ட மக்களின் சதவீதத்தையும் கேட்டு வியர்ந்து போனார். 31 சதவிதம் பொது பிரிவினருக்கும், 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கும், 18 சதவிதம் ஆதிதிராவிட மக்களுக்கும், ஒரு சதவீதம் ஆதிவாசி மக்களுக்கும் நிறைவேற்றுகின்ற மாநிலம் தமிழ்நாடு.

இன்று சமூக நீதி அடிப்படையில் கல்வி, வேலை வாய்ப்பில் உயர்த்திய மாநில தமிழ்நாடு இந்தியாவிற்கே எடுத்துக் காட்டாக இருக்கிறது. அம்பேத்கர் இயற்றிய சட்டத்தின் அடிப்படையில் தந்தை பெரியார் சொன்ன கருத்துகளை உள்வாங்கி இரண்டு தலைவர்களின் தந்த சட்ட பாதுகாப்பாக இருக்கட்டும், பகுத்தறிவு கருத்துகள், பெண்களுக்கு சமூக உரிமை, பெண்களுக்கு சொத்துரிமை கருத்துகள் அத்தனையும் நிறைவேற்றிய இரு பெரும் தலைவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் தமிழ் நாட்டில் நிறைவேற்றி தந்தார்கள்.

பேரறிஞர் அண்ணா வழியில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் இன்றைக்கு நமது திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் எல்லாருக்கும் எல்லாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமூக நீதிக்கான ஆட்சியை இன்று தமிழகத்தில் தந்து கொண்டுள்ளார். குறிப்பாக அடித்தட்டில், விளிம்பு நிலையில் எங்கெல்லாம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களோ அவர்களை கல்வியின், பொருளாதாரத்தில் சமூக மேம்பாடு ஏற்படுத்த வேண்டும் என்று உழைக்கின்ற முதலமைச்சரை நாம் பெற்று இருக்கிறோம்.

தந்தை பெரியாரின் நினைவு நாளில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடத்தப்படுவது தந்தை பெரியாருக்கு செலுத்துகின்ற மிகப்பெரிய நன்றி கடன் அதற்காக உங்களை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் சார்பில் வாழ்த்தி, பாராட்டுகிறோம். பெரியார் சொல்வார் யாரோ சொல்லி இருந்தாலும், எங்கே படித்திருந்தாலும், நானே சொன்னாலும் உன் புத்திக்கும் சரியாக இல்லை என்று சொன்னால் நம்பாதே என்றார் பெரியார்.

தந்தை பெரியாரின் கருத்துகளும், சிந்தனைகளும் அடுத்த தலைமுறை எடுத்து செல்கின்ற கடமை நமக்கு இருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு முன் 1924ம் ஆண்டு கேரள மாநிலம் கோட்டையம் வைக்கம் என்ற ஊரில் உள்ள கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுமதிக்கப்படவில்லை என்ற நிலையை அறிந்த தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று போராடினார். வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட தந்தை பெரியாருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது.

பெரியாருக்கு கை, காலில் விலங்கு மாட்டி அடைத்து வைத்தார்கள். அப்போது பெரியாரிடம் மன்னிப்பு கேளுங்கள் விடுதலை என்று சொன்னபோது தலித்துகளுக்கான உரிமையை கொடுத்தால் தான் நான் இந்த போராட்டத்தை விட்டு வெளியேறுவேன் என்று மன உறுதி படைத்தவர் தந்தை பெரியார் அவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. அப்படி பட்ட பெரியார் விடுதலை செய்யப்படுகிறார். ஆனால் ஊர் திரும்பாமல் அதே இடத்திற்கு போராட்டத்திற்குச் சென்றவர் மீண்டும் கைது செய்யப்படுகிறார். கடுமையான கொடுங்கோலை சிறையில் அனுபவித்தவர் தந்தை பெரியார் அவர்கள். அப்படிப்பட்ட தந்தை பெரியார் அவர்கள் தனது வாழ் நாளில் எந்த ஒரு அரசு பதவிக்கும் ஆசைப்படாமல் கருத்துகளை பரப்புவதற்கு முதல் குறிக்கோளாக சென்று தமிழ்நாடு முழுவதும் சென்று பகுத்தறிவு கருத்துகளை பரப்பினார். ஆதனால் தான் எல்லாருடைய மனதிலும் பெரியார் வாழ்கிறார்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, ஓ.என்.ஜி.சி. பிற்படுத்தப்பட்ட ஊழியர் நல சங்க நிர்வாகி எம்.கணேசன், தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ப.முருகமணி, ஞான.இமையநாதன், ஏ.ஆர்.ராஜா, வைத்தியநாதன், அமிர்தவிஜயகுமார், எம்.அப்துல்மாலிக், பஞ்சு.குமார். செல்லசேது.ரவிக்குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், நகர கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் வின்சென், அ.காந்தி,. பி.சிவதாஸ், ஜெ .கபிலன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் வி.சௌமியன், வி. எஸ்.என்.செந்தில், அரசு வழக்கறிஞர் இராம. சேயோன், ஒன்றியக் குழு தலைவர்கள் கொள்ளிடம் ஜெயபிரகாஷ், குத்தாலம் மகேந்திரன், கழக நிர்வாகிகள் ஆர்.கே.சரவணன், கலியபெருமாள், விஸ்வநாதன், ராஜாங்கம், கருணாகரன், ஊராட்சி மன்ற தலைவர் பெரியசாமி மற்றும் .என்.ஜி.சி. பிற்படுத்தப்பட்ட ஊழியர் நல சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

முடிவில் சங்க பொதுச் செயலாளர் ஆர்.தனசேகர் நன்றி கூறினார்.

---

### கழக முன்னாள் மாநில தொண்டரணி செயலாளர்

# சிந்தை மு.ராஜேந்திரன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, டிச. 27-

கழக முன்னாள் மாநில தொண்டரணிச் செயலாளரும் கழக முன்னோடியுமான சிந்தை மு.ராஜேந்திரன் அவர்களின் மறைவிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழக முன்னாள் மாநில தொண்டர் அணி - செயலாளர் - மத்தூர் கலைமகள் கல்வி நிலைய தாளாளர் - முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் - கழக மூத்த முன்னோடி முனைவர். சிந்தை. மு.ராஜேந்திரன் அவர்கள் நேற்று (25.12.2024) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிந்தை மு.ராஜேந்திரன் மறைவுக்கு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**கழக மாநில தொண்டர் அணி முன்னாள் செயலாளர் முனைவர் சிந்தை மு.ராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் தி.மு.கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர். தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை முன்னாள் இயக்குந ராகப் பணியாற்றியவர். தருமபுரி மாவட்டம், மத்தூரில் கலைமகள் கல்வி நிலையத்தைத் துவக்கி, அப்பகுதி மக்கள் கல்வியில் மேம்பட பாடுபட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுக்கச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நாட்களில் தொண்டரணிச் சீருடையில் உடன் வந்தவர்.**

**அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும், தருமபுரி மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### திருப்பத்தூர் ஒன்றியம் -

# கந்திலி ஒன்றியத்தில் 5 புதிய மின்மாற்றிகள்!

## ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருப்பத்தூர், டிச.27-

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொடுமாம்பள்ளி, மாடப்பள்ளி ஊராட்சி கல்லுக்குட்டை, குரும்பகேரிபுதூர் மற்றும் கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட கொரட்டி ஆகிய 5 ஊராட்சிகளிலுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மின்பற்றாக் குறையை போக்கிடும் வகையில் 5 புதிய மின்மாமற்றிகளை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசு துறை அதிகாரிகள், ஒன்றிய செயலாளர்.கே. ஏ. குணசேகரன், திருப்பத்தூர் ஒன்றிய சேர்மென்.விஜய அருணாசலம், துணை சேர்மென். டி.ஆர்.ஞானசேகரன், ஊராட்சிமன்ற தலைவர்கள். லட்சுமி கார்த்தி கேயன், ஸ்டெல்லாமேரிதேவசகாயம், கோமதிகார்த்திகேயன்,

கவுன்சிலர்கள்.கஸ்தூரி ரகு, லட்சுமிசந்திரசேகர், வே.அன்பழகன், எல்.சிவலிங்கம், எஸ்.சரவணன், பி.ஆர்.சின்னபபையன், கே.எஸ். தேவேந்திரன், மாது,சக்கரவர்த்தி, தீபாசுப்பிரமணி மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் கிளை செயலாளர்கள், கழக தோழர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.

---

### சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவியின்

# பாலியல் புகார் மீது உடனடி நடவடிக்கை!

## பதிவாளர் அறிக்கை!

சென்னை, டிச.27-

சென்னை அண்ணா பல்கலைக்கழக, கிண்டி பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவி ஒருவர், ராஜா அண்ணாமலைபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்துள்ளார்.

மேற்படி புகாரில், மாணவி தனது ஆண் நண்பருடன் கல்லூரி வளாகத்தின் பின்புறம் பேசிக்கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர்கள் இருவரையும் அச்சுறுத்தியதாகவும் பின்னர் அதே நபர்கள் தன்னுடைய நண்பரை தாக்கிவிட்டு தன்னை பாலியல் சீண்டலுக்கு முயன்றதாக மாணவி காவல் நிலையத்தில் 24.12.2024 அன்று புகார் தெரிவித்துள்ளார்.

இந்த புகாரின் பேரில் காவல்துறையினர் உரிய வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றார்கள். கோட்டூர்புரம் காவல் நிலைய உதவி ஆணையர் தலைமையில், ஆர்.ஏ.புரம் மகளிர் காவல் நிலையக் குழுவினருடன் வழக்கை தீவிர விசாரணை செய்து வருகின்றனர். இது தொடர்பாக அண்ணா பல்கலைக் கழக உள் புகார்க் குழுவினருக்கும் தற்போது தகவல் தெரிவிக்கப்பட்டு, குழுவின் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

காவல்துறையினரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று உயர்கல்வித்துறை உயர் அலுவலர்கள் அண்ணா பல்கலைக்கழக பதிவாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாகம் காவல்துறையினரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது.

பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பு பணியாளர்கள் எப்போதும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த விரும்பத்தகாத சம்பவம் நடந்துள்ளது. இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழாமல் இருக்க பல்கலைக்கழக அளவில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அண்ணா பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரை அனைத்து மாணவர்களின் பாதுகாப்பு எப்போதுமே முதன்மையான முன்னுரிமையாக உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து கைது செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல் துறை அலுவலர்கள் உறுதியளித்துள்ளனர்.

இவ்வாறு சென்னை அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

---



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தந்தை பெரியாரின் 51வது நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் பெரியார் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி.மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் க.செந்தில்குமார், சிவகுமார், அரசு வழக்கறிஞர் பா.விஜயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை சர்வதேச விமான நிலையத்தில் 24.12.2024 அன்று தமிழ்நாடு அரசின் ஏற்பாட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் ஜப்பான்,KYOTO பல்கலைக்கழகத்தில், சர்வதேச இன்டர்ன்ஷிப் திட்டத்தில் (International Internship Program) பங்கேற்ற மாணவியர்கள் தமிழ்நாடு வருகை புரிந்தனர்.